# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 7வது கூட்டம் ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 16-08-2009 அன்று மாலை 6.20 மணிக்கு ஆரம்பமானது. அன்றைய கூட்டத்திற்கு திரு. அல்பிரட் ஞானராஜா, திரு. விஜயக்குமார் அகஸ்ரின், திரு. அலெக்ஸ் மார்க்கண்டு, திரு. தேவதாஸ் விசுவாசமுத்து, திரு. ரொபின் ஜேசுதாசன் திரு. சார்ள்ஸ் அமிர்தநாதர், ஆகியோர் சமூகம் தரவில்லை. கடந்தமாத கூட்ட அறிக்கையினை செயலாளர் வாசித்தார். பின் கூட்ட அறிக்கையில் ஆலயத்தின் முன்றலில் உள்ள வளைந்த ஓடுபாதையை திருத்தி அமைக்கும் பொறுப்பை நிர்வாக சபை ஏற்றுக் கொண்ட போதும். அதனை நிறைவேற்றாமையால் அவர்களிடம் பலமுறை இது பற்றிக் கலந்துரையாடிய பின்னர், அது பங்குச்சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, குறிப்பிட் நேரத்தில், குறிப்பிட்ட தொகைக்குள் அந்த வேலை செய்து முடிக்கப்பட்டது பற்றி அவ்வறிக்கையில் குறிப்பிடப்படாதது சுட்டிக் காட்டப்பட்ட பின்னர் அது அறிக்கையில் இணைக்கப்பட்டு, திரு. அமிர்தநாதர் பாக்கியநாதர் முன்மொழிய, திரு. அம்புறோஸ் தாவீது வழிமொழிய கூட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், பங்கு மக்கள் மேற்கொண்ட யாத்திரை மிகவும் நிறைவுள்ளதாக அமைந்தது என்பதை பங்குத்தந்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்திருந்தார். எனவே, அதைப் போன்று இன்னுமொரு யாத்திரை செல்லவேண்டும் எனப் பலர் கேட்டிருந்தமையால், அதற்கு ஏற்பாடு செய்வது பற்றிக் கலந்துரையாடப்பட்டது. மேலும், கடந்த யாத்திரையில் வயோதிபர்கள் அதிகம் கவனிக்கப்படவில்லை என்ற ஒரு குறைப்பாடு எழுந்தமையால் இம்முறை அவர்கள் நன்கு கவனிக்கப்பட ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆலயத் திருத்த வேலைகள் பற்றிக் கலந்துரையாடுகையில், ஆலயத்தின் கூரையைச் சுற்றியுள்ள உலோகத்தைப் பொருத்துவதற்கும், தூண்களுக்கு வர்ணம் பூசுவதற்கும் ஏதுவாக Sky jack ( வான் உயர்த்தி ) ஒன்றை வாடகைக்குக் பெற வேண்டும் என்றும், நிர்வாக சபை உறுப்பினர்கள் 6 பேரையும், ஒவ்வொரு கிழமை நாட்களுக்குப் பொறுப்பாக நியமித்து, பங்குமக்கள் அனைவரதும் உதவிகள் கோரப்பட்டு இவ்வேலைகளைச் செய்து முடிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நாட்டில் பல வரிகள் செலுத்த வேண்டியிருப்பதால், நிதியை சரியான முறையில் திட்டமிட்டு பேணவேண்டும் எனப் பங்குத்தந்தை கூறினார். மேலும் வயோதிபர்களுக்கான நிகழ்வுகள்பற்றி கலந்துரையாடப்பட்டது. அதில், அவர்களுக்கு ஒரு ஆயுள் காப்புறுதித்திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டடது. அத்தோடு அவர்கள் எல்லாரையும் முதலில் ஒன்றிணைத்து அவர்களுக்கு இதனை வெளிப்படுத்தும் வகையில் திரு. மோசஸ் சூசைமாணிக்கம், திரு. அம்புறோஸ் தாவீது, திருமதி கலிஸ்ரா தவராஜா ஆகியோர் இதை கலந்தாலோசித்து செய்யலாம் என்றும் அதற்கு தாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் முன்வந்தார்கள்.

# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மேலும், புரட்டாதி மாதம் வகுப்புக்கள் தொடங்குவதால் எம் பங்கு மாணவர்களுக்கு கணனிகள் வாங்கிவைத்து அவர்களுக்குப் பயிற்சிநெறி ஒன்றினை வழங்கலாம் என்றும், அத்தோடு பிள்ளைகளுக்கு அவர்கள் எதனைப் பார்க்கின்றார்கள்? என்பது புரியாத சந்தர்ப்பத்தில் அவர்களும் வந்து சிலவற்றைத் தெரிந்துகொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமையும் என்றும் பங்குத் தந்தை கூறினார். மேலும், வளர்ந்து வரும் இளைஞர்களை நல்வழிப்படுத்தும் வகையில் அவர்களை ஆலயத்தின் சில பணிகளில் ஈடுபடுத்துவதன்மூலம், அவர்கள் எம்மோடு ஒன்றிணைந்து செல்லும் வாய்ப்பையும், நல்லுணர்வையும் ஏற்படுத்தலாம் என்று திரு. அம்புறோஸ் தாவீது கூறினார்.

மேலும், திருநாட் திருப்பலிகளின்போது பீடப்பணியாளர்கள் நிறைந்து காணப்படுவதாகவும், பல தடவைகளில் ஞாயிற்றுக்கிழமை மாலைத்திருப்பலிக்கு உதவ யாரும் இருப்பதில்லை என்றும், சில ஞாயிறு திருப்பலிகளில் Organ வாசிப்பதற்கு யாரும் இருப்பதில்லை போன்ற குறைபாடுகளும் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இக் குறையை நீக்குவதற்கு ஒரு அட்டணை தயாரித்து பேணி வருவோமேயாயின் யார்யாருக்கு? எவ்வெப்போது? சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது என்பதையறிந்து இக்குறைகளை நிவர்த்திசெய்ய உதவியாக இருக்குமென திரு. யூலியன் அவர்கள் கூறினார். மற்றும், தாயக சிறுவர் பராமரிப்பு நிதிக்காக நடாத்தப்படும் சிற்றுண்டி உணவகத்தின் செயற்பாடுகள் பற்றி கடந்த மூன்றுமாத காலமாக எந்தத் தகவலும் இல்லாமையால், அதனை தாமே பொறுப்பேற்று நடாத்துவதாகவும், வேறுயாராவது அதற்க்கு உதவமுன்வந்தால் உதவலாம் என்றும் திரு. யூலியன் அவர்கள் கூறினார்.

தாயகத்தில் கட்டப்படவுள்ள ‘உதவும் கரங்கள்’ கட்டிடத்தின் வரைபடம் கிடைத்தால் அதற்கு மறைத்தளத்தின் பெயரை வைக்கலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது. அக்கட்டிடத்திற்கான நிதியை நாம் மக்களிடமிருந்து பெறுவதற்காக அந்தப் பெயரில் பற்றுச்சீட்டுப் புத்தகம் ஒன்று தயாரித்தால் உதவியாக இருக்கும் என திரு. அமிர்தநாதர் அவர்கள் கூறினார். மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை அனைத்து மறைத்தள மக்களுக்கும் வெளிப்படுத்தும் வகையில், ‘மறைக்கல்வி ஞாயிறு’ ஒன்றை ஏற்பாடு செய்வதாகவும், திருப்பலியில் நற்கருணை பெறுவதற்கு மக்களை ஒழுங்காக வரிசையில் அனுப்பிவைப்பதற்குரிய ஏற்பாடுகளைத் தான் பொறுப்பேற்றுச் செய்வதாக திரு. அம்புறோஸ் அவர்கள் கூறினார். இறுதியில் திரு. அம்புறோஸ் அவர்களின் இறுதிச்செபத்தடன் கூட்டம் நன்றே நிறைவுபெற்றது.

| | |
|---|---|
| அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம் | திரு.நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 16-08-2009**